நாள் 09.10.2024 CC 332/2019 அ.சா .1

பெயர் கன்னிமுத்து த/பெ.சின்னகாளியப்பன்

**எதிரிகள் 1 முதல் 4 நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் கு.வி)

(1) சரஸ்வதி எனது மனைவி, சண்முக சுந்தரம் மற்றும் சரவண குமார் எனது மகன்கள் என்றால் சரிதான். காளிமுத்து கவுண்டர், மயிலாத்தாள், சௌந்தர்ராஜன் ஆகியோர் எனது அண்ணன், அண்ணி, அண்ணன் மகன் என்றால் சரிதான். எனது பூமிக்கு மேல்புறம் புதிததாக 1ம் எதிரி கண்ணன் பூமி வாங்கினார் என்றால் சரிதான். 1ம் எதிரி எனது பூமியின் பொது வண்டிப்பாதை வழியாகத்தான் கண்ணன் வகையறா பூமிக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். எதிரி கண்ணன் புதிதாக கிணறு வெட்டியதால் எனது நீர் ஆதாரங்களை எதிரி கண்ணனின் பூமிக்கு சென்றுவிட்டது என்றால் சரியல்ல. எங்களுக்கு எப்போதும் நல்ல தண்ணி வந்து கொண்டிருந்தது. நான் பொய்யாக சொல்கிறேன் நான் 1ம் எதிரியிடம் தண்ணீர் கேட்டு அவர் பூமிக்கே தண்ணீர் போதுமானதாக உள்ளது என்று சொன்னார் என்றால் சரியல்ல. இந்த வழக்குச் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பொது வண்டிப்பாதை எனக்கும், கண்ணனுக்கும் பாத்தியப்பட்ட பொது வண்டிப்பாதை என்றால் சரிதான்.எங்கள் பூமிக்கு அருகில் வேறு நபர்கள் விவசாய பூமி நிறைய உள்ளது. ஆட்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான்.

(2) நான் குழியன் தோட்டத்திலும், மயிலாத்தாள் அணை தோட்டத்திலும் வசிக்கிறார்கள் என்றால் எனக்கு அணை தோட்டத்திலும் 1 ½ ஏக்கர் பூமி உள்ளது. 1ம் எதிரி கண்ணன் கிருஷ்ணாபுரத்தில் வசித்து வருகிறார் அவருக்கு காடு மட்டும் தான் சம்பவ இடத்திற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். எதிரி கண்ணனிடம் நான் தண்ணீர் கேட்டு தாராததால் அவரை பொது வண்டித்தடத்தில் நடக்கும் போதும், விவசாயம் செய்த போது இடைஞ்சல் செய்தேன் என்றால் சரியல்ல. கண்ணன் தோட்டத்திற்கு அடுத்த தோட்டம் எனது மகன் சண்முகம் தோட்டம் உள்ளது அதற்கு கண்ணன்

தடுத்ததால் நானும் என் காட்டு நேராக வர வேண்டாம் என்று சொல்லி தடுத்தேன். காட்டிற்கு நேராக என்று நான் குறிப்பிடுவது பொது வண்டிப்பாதை என்றால் சரிதான். நான் உடுமலை அரசு மருத்துவமனைக்கு மாலை 3 முதல் 4 மணிக்குள் வந்தேன்.

**அ.சா.1 எதிரி தரப்பு வழக்கறிஞருடன் உரத்த குரலில் பேசியும் எதிரி தரப்பு வழக்கறிஞரை இந்த கேள்வி ஏன் ? கேட்கவில்லை என்று கூறியும் சாட்சியத்தின் இடையே பேசியதால் மேற்படி சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக மற்றொரு நாளுக்கு வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

ஒப்பம்/– கோ.விஜயகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்